சுருக்கம்

சிறுபான்மையினர் நலன் – 2021–22–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் புதிய அறிவிப்பு – சிறுபான்மையின மக்களுக்கு இலவச மின்மோட்டாருடன் கூடிய 1000 தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் – நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது – நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல(சிநஆபி1)த் துறை

அரசாணை (நிலை) எண்.18

நாள் 13.03.2023
திருவள்ளுவர் ஆண்டு 2054
மாசித் திங்கள் 29–ஆம் நாள்

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.90, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 09.12.2021.
2. சிறுபான்மையினர் நல இயக்குநரின் கடித எண். அ6/2985/2021, நாள் 13.07.2022, 16.09.2022 மற்றும் 15.12.2022.

*****

ஆணை: –

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2021–22–ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயற்படுத்தும் விதமாக 1000 சிறுபான்மையின பயனாளிகளுக்கு மின்மோட்டாருடன் கூடிய இலவச தையல் இயந்திரம் வழங்குவதற்கு நிருவாக ஒப்புதல் அளித்து ஆணையிடப்பட்டது.

2. அதனைத் தொடர்ந்து, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் பெறப்பட்ட சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநரின் கருத்துருவை, அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்று 2021–2022–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி ஏழ்மை நிலையிலுள்ள சிறுபான்மையின மக்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்தும் நோக்குடன் இலவச மின்மோட்டாருடன் கூடிய 1000 தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்திற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி திட்டத்தை செயற்படுத்த ரூ.61,60,000/– (ரூபாய் அறுபத்தொரு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2225 – ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 04 – சிறுபான்மையினர் நலன் – 102 – பொருளாதார முன்னேற்றம் – மாநிலச் செலவினங்கள் – AA – சிறுபான்மையினருக்கு இலவசமாக தையல் இயந்திரம் வழங்குதல் – 319 – இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல்.

(IFHRMS ததொகு: 2225 – 04 – 102 – AA – 31901)"

4. மேலே பத்தி 3–இல் காணும் புதிய கணக்குத் தலைப்பிற்கு சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார். மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையைப் பெற்று செலவினத்தை மேற்கொள்ள சிறுபான்மையினர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

5. மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப்பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு, பொது–I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையிலான காலத்திற்கு தேவையான நிதியினை சரியாக கணக்கிட்டு 1963 எதிர்பாரா செலவு நிதி விதிகளில் குறிப்பிட்டுள்ள அட்டவணை "A" யினை பூர்த்தி செய்து எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெற இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு – செலவு, பொது–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், சிறுபான்மையினர் நலன், சென்னை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்தினை 2022–2023–ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய கருத்துருவை நிதி (பி, மிபி (ம) சிந / வ.செ.பொது.I) துறைக்கு அனுப்பிவைக்குமாறு இயக்குநர், சிறுபான்மையினர் நலன், சென்னை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண்.7058/நிதி (பி, மிபி (ம) சிந)/2023, நாள் 10.03.2023–இல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண் 2619 (இரண்டாயிரத்து அறுநூற்று பத்தொன்பது) (IFHRMS ASL No:– 2023032619)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**மங்கத் ராம் சர்மா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்
இயக்குநர்,
சிறுபான்மையினர் நலன், சென்னை–5.

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர்,
சென்னை, வேலூர், விழுப்புரம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர்.
மாநில கணக்காயர், சென்னை–18
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.

<u>நகல்</u>

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ்
தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
நிதி (பி, மிபி (ம) சிந / வ.செ.பொ. I / II) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச்செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
அரசு சிறப்புச் செயலாளரின் நேர்முக உதவியாளர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

24/3/23

பிரிவு அலுவலர்